# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்

அவர்கள் கப்பர்நாகுமுக்கு வந்தார்கள். அவர்கள் வீட்டில் இருந்த பொழுது இயேசு, "வழியில் நீங்கள் எதைப் பற்றி வாதாடிக் கொண்டிருந்தீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார். அவர்கள் பேசாதிருந்தார்கள். ஏனெனில் தங்களுள் பெரியவர் யார் என்பதைப் பற்றி வழியில் ஒருவரோடு ஒருவர் வாதாடிக்கொண்டு வந்தார்கள்.

அப்பொழுது அவர் அமர்ந்து, பன்னிருவரையும் கூப்பிட்டு, அவர்களிடம், "ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்" என்றார். (மாற்கு 8: 33-35)



## ஹங்கேரி, சுலோவாக்கியா நாடுகளுக்குத் திருத்தந்தை திருத்தூதுப் பயணம்

**வத்திக்கான்:** வத்திக்கானில் தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்திலிருந்து, கடந்த செப்டம்பர் 12, ஞாயிறு உள்ளூர் நேரப்படி, அதிகாலை 5.20 மணிக்கு, மத்திய ஐரோப்பிய நாடுகளான ஹங்கேரி மற்றும், சுலோவாக்கியா நாடுகளுக்கு திருத்தந்தை தனது 34வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணத்தைத் துவக்கினார்.

புடாபெஸ்ட் நகரில் நடைபெற்றுவரும் 52வது உலக திருநற்கருணை மாநாட்டை நிறைவுசெய்வதற்காக அங்குச் சென்ற திருத்தந்தையை அம்மாநாட்டில் பங்கு கொண்ட பல்வேறு நாடுகளின் விசுவாசிகள் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் என்று, கர்தினால் பரோலின் அவர்கள் கூறினார்.

கடந்த ஜூலையில், பெருங்குடலில் ஏற்பட்ட பிரச்சனையால் அறுவை சிகிச்சை செய்து குணம் பெற்றுள்ள திருத்தந்தை, அதற்கு, சுலோவாக்கியா நாட்டின் Šaštin நகரில் வணங்கப்பட்டுவரும் துயருறும் அன்னை மரியாவிடம் நன்றி செலுத்தினார். அத்தோடு, மிகவும் துன்பச் சூழல்களை எதிர்கொண்டுவரும் மக்களை வியாகுல அன்னையிடம் அர்ப்பணித்தார் என்றும் அறிக்கையொன்று கூறுகிறது.

சிரில், மெத்தோடியஸ் ஆகிய புனிதர்களின் நினைவிலேயே வாழ்கின்ற சுலோவாக்கியா சமுதாயம் திருத்தந்தையை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். அந்நாட்டு அரசியலமைப்பின் முன்னுரையிலேயே, இப்புனிதர்கள், ஆன்மீக மற்றும் கலாச்சாரத் தந்தையர்களாக குறிக்கப்பட்டுள்ளனர் எனவும், இதை உணர்ந்த திருத்தந்தை, அப்புனிதர்களின் எடுத்துக் காட்டைப் பின்பற்றி, வீதிக்குச் சென்று நற்செய்தி அறிவிக்கும் திருஅவைக்கு, நாம் எனும் கேள்வியை அவருடைய சீடர்கள் நம் மனதில் நிறுத்தவேண்டும் என்றும் இக்கேள்விக்கான பதில் நம்மை நாமே சீடத்துவத்தில் புதுப்பித்துக்கொள்ள உதவுகிறது என்றும் கூடியிருந்த ஒரு



*துயருறும் அன்னை மரியா திருத்தல வளாகத்தில் திருப்பலி கொண்டாடும் திருத்தந்தை*

சாட்சிகளாக வாழ வேண்டும் என்றும அழைப்புவிடுத்தார்.

மேலும், புடாபெஸ்ட் நகரில் நடைபெற்ற 52வது உலக திருநற்கருணை மாநாட்டின் நிறைவு திருப்பலியில் கலந்துகொண்ட திருத்தந்தை, உலக மக்களை ஒன்றிக்கும் இடமாக திருபீடத்தை நினைவுகூரந்து திருப்பலியைக் கொண்டாடினார். அவ்வேளையில் இயேசு எழுப்பிய, "மானிட மகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?" இலட்சம் மக்களுக்கு மத்தியில் எடுத்துரைத்தார். இயேசு நம்மை உலகைச் சார்ந்து அல்ல. மாறாக கிறிஸ்துவைச் சார்ந்து, வாழ்ந்து தன்னலத்தை வெல்ல வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்,

சுலோவாக்கியா அரசுத்தலைவர் திருத்தந்தையை வரவேற்று, நன்றியோடு வழியனுப்பி வைத்தார். அங்கு திருத்தந்தைக்கு, இராணுவ மரியாதையும் அளிக்கப்பட்டது.

## அடுத்த வாரம் உலக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தினம் கொண்டாடப்படுகிறது

இந்த ஆண்டு, செப்டம்பர் 26-ஆம் நாளன்று உலக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தினம் கொண்டாடப்படுகிறது. உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்கள், போர்கள், போராட்டங்கள், துன்புறுத்தல்களால் இடம் பெயர்ந்தவர்களை நினைவில் கொள்ளவும், 'பரந்த நாம்' எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு சிந்தித்துச் செயல்படவும் இந்நாளில் திருத்தத்தை பிரான்சிஸ் அழைக்கிறார்.

படைப்பில் 'நாம்' கடவுளின் உருவில் படைக்கப்பட்டோம். பாவத்தில் 'நாம்' கடவுளுக்கு எதிராகச் செயல்பட்டோம். இறுதியில் 'நாம்' மீண்டும் கடவுளின் பிள்ளைகளாக உயிர்த்தெழுவோம். ஆகவே 'நாம்' எனும் ஒன்றிப்பில் நம்மோடு இணைந்துள்ள அகதிகளையும் நாடற்றவர்களாக பல்வேறு காரணரங்களுக்காகப் புலம் பெயர்ந்தோரையும் நினைவுகூர வேண்டும் என்கிறார்.

உண்மை என்னவென்றால், நாம் அனைவரும் ஒரே படகில் இருக்கிறோம், ஒன்றாக வேலை செய்ய அழைக்கப்பட்டோம், இதனால் நம்மைப் பிரிக்கும் சுவர்கள் இல்லாது, மற்றவர்கள் என்ற எண்ணத்தையும் களைந்து, "நாம்" என்பது மனிதகுலம் முழுவதையும் உள்ளடக்கியதொன்றாகக் கருதப்பட வேண்டும் என்றார். இவ்வாறு நான் இந்த உலக தினத்தை இரண்டு விதமான வேண்டுகோள்களை வைத்து உரையாற்ற விரும்புகிறேன். முதலில் கத்தோலிக்க நம்பிக்கையாளர்களும், பின்னர் உலகில் அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும், ஒரு பரந்த "நாம்" என்ற தொலைநோக்கில் ஒன்றிணைந்து முன்னேற வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைக்கிறேன் என்கிறார் திருத்தந்தை. இவரது முழு உரை அடுத்த வாரம் இடம்பெறும்.

# தம்பின் பங்கில் ஒரு திருத்தொண்டர் உதயமானார்

## "என்னை மேய்த்திடும் ஓ, ஆண்டவரே!'

இறையழைப்பை ஏற்று தமது குருத்துவக் கல்லூரிக் கல்வியை முடித்துக்கொண்ட அருள்சகோதரர் மைக்கல் தாஸ் அவர்களின் திருத்தொண்டர் அருள்பொழிவு நிகழ்வு கடந்த செப்டம்பர் 11-ஆம் நாள், கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் பேராயர் சிற்றாலயமான கார்டைன் இல்லத்தில் கொண்டாடப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் 24-ஆம் நாள் நடைபெறவிருந்த இக்கொண்டாட்டம் நடமாட்டக் கட்டுப்பாடு ஆணையின் காரணமாக, ஒத்திவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 20 பேர் மட்டுமே நேரடியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வை மற்றவர்கள் ArchKL-TV வலையொளி வாயிலாகக் கண்டனர்.

பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் தலைமையில், அருள்தந்தையர்கள் கிறிஸ்தபர் சூசைப்பிள்ளை, டேவிட் அருளனந்தம், பீட்டர் அந்தோணி, பொனவெஞ்சர் இராயப்பன் மற்றும் சுரேன் துரைராஜ் ஆகியோர் இணைந்த கூட்டுத் திருப்பலியில், மேற்கண்ட அருள்பொழிவு நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வின் தொடக்கத்தில், அருள்தந்தை கிறிஸ்தபர் சூசைப்பிள்ளை அவர்கள் வேட்பாளரான அருள்சகோதரர் மைக்கல் தாஸ் அவர்களை பேராயர் முன் அருள்பொழிவுக்குத் தகுதிப்பெற்றவராக முன்னிறுத்தினார்.

பேராயர் அவர்தம் மறையுரையில், தூய ஆவியாரின் கொடையால் திடப்படுத்தப்பட்ட அருள்சகோதரர் மைக்கல் தாஸ் ஆயருக்கும் மற்றும் அவரது அருள்பணியாளர்களுக்கும் இறைவார்த்தை போதித்தல், பலிநிறைவேற்றல் மற்றும் இதர அறப்பணிகளில் உதவி செய்வதோடு, அவர் தன்னை எவ்வேளையிலும் ஓர் ஊழியராகவே வெளிப்படுத்திக்கொள்வார் என்றும் கூறினார்.




அத்தோடு, 'என்னை மேய்ப்பனாக்கும் ஓ, ஆண்டவரே!' எனும் கருப்பொருளில் தாம் மகிழ்வதாகவும், அருள்சகோதரர் மைக்கல் தாஸ் இயேசு கிறிஸ்துவைப் பின்செல்லும் ஒரு செம்மறியாகத் தன்னை கருதுவதை நினைத்து தாம் பெருமிதம் கொள்வதாகவும் அவர் கூறினார். அருள்பொழிவுக் கொண்டாட்டத்தின் நிறைவாக, திருத்தொண்டர் மைக்கல் அவர்கள் அவரது அருள்பொழிவுக்குக் காரணமாக விளங்கிய பெற்றோருக்கும், இரு சகோதரர்களுக்கும் உறவினர்களுக்கும், தம்பின் பங்கு மக்களுக்கும், பங்குத் தந்தை பீட்டர் அந்தோணி அவர்களுக்கும் மலாய். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நன்றி நவில்ந்தார். பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் இறுதியாக, அடுத்த அறிவிப்பு வரை சிறிது காலம் தம்மோடு தங்கியிருப்பார் என்று அறிவித்தார்.

ஓர் எளியக் குடும்பத்தைச் சேர்ந்த திருத்தொண்டர் மைக்கல் தாஸ் அவர்கள், தம்பினில் பிறந்து வளர்ந்தவர் ஆவார். அருள்பணி வாழ்வுக்கு இவரது தேர்வானது, திருஅவைக்கு ஒரு பெரும் கொடை என்றே கூற வேண்டும்.

# புதிய முறையில் மறைபரப்புக்கான கல்வி மையம் அமைந்தது

இக்காலத்து உலகளாவிய குழப்பங்களுக்கு மத்தியில், கத்தோலிக்க திருஅவை புதிய செயல்முறைகளுக்கு ஏற்பவும், தொழில் நுட்பத்தின் கொடைகளுக்கு ஏற்பவும் மாற்றங்களை ஏற்றுக்கொண்ட நிலையில் தொடரந்து பயணிக்கிறது. அது இயங்கலை வாயிலாகத் திருப்பலியிலும், செபமாலை இறைவேண்டல்களிலும் அ.தி.ச. கூட்டங்களிலும் பங்கெடுக்க முடிகிறது.

நாம் வாழும் இந்த மெய்நிகர் காலத்தில் (virtual era) திருஅவைக்குள்ளும் வெளியேயும் அதிகமானோர் பங்கெடுக்கும் வகையில் உருவாக்கப் பயிற்சிகளை மேற்கொள்ள முடிகிறது. இதன்வழியாக கிறிஸ்துவின் மறைத்தூதுப் பணியில் பங்குக்கொள்ளவும் முடிகிறது. மறைபரப்பு எனும்போது. அதன் ஆழமான பொருளை கத்தோலிக்கர்கள் இன்னும் அதிகமாக அறிந்துணர்ந்து செயல்பட வேண்டியுள்ளதன் அவசியத்தை மறுப்பதற்கில்லை.

நம்மில் இறங்கினார். இப்பணியானது ஒரு காலத்தில் அருள்பணியாளர்களையும் ஆயர்களையும் சேர்ந்ததாக மட்டும் எண்ணப்பட்டது.

குறிப்பாக இந்த மெய்நிகர் காலத்தில் இந்த மறைப்பரப்பு பணியை ஏற்றுக்கொள்வது சவாலானது என்பதை கருத்தில் கொண்டு, புதிய முறையில் மறைபரப்புக்கான கல்வி மையம் (INE) கத்தோலிக்க சமூகம் 'செயலில் இறங்க' ஊக்குவிக்கும் ஒரு முறையைத் தொடங்கியுள்ளது. பங்கு அளவில் பொதுநிலையினரிடையே தலைமைத்துவம் மற்றும் பங்குத் தலைவர்களுக்கான உருமாற்றப் பயிற்சியை (PLTT) தொடங்கியுள்ளது. இது இத்தொற்றுநோயின் தொடக்கத்தில் திருஅவை தலைவர்களை அணிதிரட்டுவதை நோக்கமாகக் கொண்தோடு. அவர்களை மிகவும் திறமையான, தொடர்புக்குரியவர்களாகவும் சூழலுக்கு ஏற்ப மாற்றத்தை ஏற்பவர்களாகவும் உருமாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




இந்த மறைப்பரப்பு எனும் சொல்லானது தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு புதிய சொல்லாக இருக்கலாம். ஏனெனில், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பு (1962-1965) இச்சொல் நமது பயன்பாட்டில் இருந்ததில்லை. மறைபரப்பு என்பது இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்திராதவர்களுக்கு அதை எடுத்துரைப்பதாகும். நமது திருமுழுக்கின் வாயிலாக, இந்நற்செய்தியை பிறருக்கு எடுத்துரைக்கும் பணி நம்மில் சுமத்தப்பட்ட பணியாக உள்ளது. தூய ஆவியார் இப்பணியை நிறைவேற்றும் மக்களாக திருமுழுக்கில்

இந்த பொதுயிநிலையினர் உருமாற்றப் பணியை ஏற்றுள்ள கல்வி இயக்கம், கடந்த ஜூலை மாதம் 23-ம் திகதி அன்று, மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் ஆயர் பெர்னர்ட் பவுல், பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயர் செபஸ்தியன் பிரானசிஸ் மற்றும் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் ஆகியோரால் அதிகாரப்பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து, ஜூலை 24 மற்றும் ஆகஸ்டு 28 ஆகிய நாள்களில் இயங்கலை வாயிலாக நடைபெற்ற ஆறு அமர்வுகள் கொண்ட பயிற்சியில் 113 பேர் கலந்துகொண்டனர்.

# இறைவாக்கினர் தோற்றமும் இறைவாக்குரைத்தலும்

**காஜாங்:** கடந்த ஆகஸ்டு மாதம் தொடங்கி, மாதத்தின் முதல் செவ்வாய்க்கிழமைகளில் நடத்தப்படும் திருவிவிலியப் பகிர்வு தொடரில், இம்மாதம் ‘இறைவாக்கினர்: தோற்றமும் இறைவாக்குரைத்தலும்’ என்ற தலைப்பில் காஜாங் திருக்குடும்ப ஆலயத்தின் ஆர்.கே.சாமி சொற்பொழிவாற்றினார். திருக்குடும்பப் பங்கின் துணைப்பங்கு தந்தை விண்சன்ட் தோமஸ் அவர்களின் சிந்தனையில் உதித்த இத்தொடர் விவிலியப் பகிர்வுக்கு, தமிழ் விவிலியப் பணிக்குழு இயங்கலை வாயிலாக ஏற்பாடு செய்து வருகிறது.

‘எச்சூழலிலும் இறைவனின் அழைப்புக்கு ஏற்றவாறு, அவரதுக் குரலாக பணியில் அச்சமின்றி முழுமையாகச் செயல்படுவதே இறைவாக்கினரது சிறப்பு’ என்பதை தெளிவாக ஆர். கே விளக்கினார். இவ்வாறு செயல்பட்ட பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களை, நூல் கொண்ட இறைவாக்கினர்கள் 16 பேர் என்றும் நூல் காணா இறைவாக்கினர் 19 பேர் என்றும் பிரிக்கலாம். என அவர் கூறினார். நூல் கொண்ட இறைவாக்கினர்களை, பெரிய இறைவாக்கினர் (4) என்றும் சிறிய இறைவாக்கினர் (12) என்றும் பிரிக்கப் படுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். அவர்களின் பெயரில் உள்ள நூல்களின் அதிகாரங்களைக் கொண்டு, அவர்கள் பெரிய இறைவாக்கினர் என்றும் சிறிய இறைவாக்கினர் என்றும் வகைப்படுத்தப் பட்டுள்ளனர் என்தையும் தெளிவுப்படுத்தினார்.

இறைவன் தொடக்கத்தில் தாம் அழைத்தவர்களோடு குறிப்பாக, ஆபிரகாம், அவரது புதல்வர் ஈசாக், அடுத்து யாக்கோபு இறுதியாக மோசேயிடம் கடவுள் நேரடியாக பேசினார். பின்னர் ‘தலை வணங்கா” யூத மக்களின் போக்கைக் கண்டு, இறைவாக்கினர்கள் வழியாகக் கடவுள் பேசத் தொடங்கினார். இறுதியாக, இஸ்ரயேல் நாடு இரண்டாக உடைந்த பின்னரே, பெரும் பாலான இறைவாக்கினர்கள் அனுப்பப்பட்டனர். இறைவாக்கினர்களின் கண்டிப்பான, அழுத்தமான போதனையாலும், அன்பான, ஆறுதலான வார்த்தையாலும் அவர்கள் வழிநடத்தப்பட்டு, மீட்பரின் வருகைக்கு யூதக்குல மக்கள் தயார் செய்யப்பட்டனர் என்பதையும் விவரித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஏறக்குறைய 2 மணி நேரம் நடந்தேறிய இந்த விவிலியத் தொடரில் 140 பேர் வரை கலந்து கொண்டனர். அடுத்தப் பயிற்சி 05-10-2021அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

## இறைவேண்டல்களைத் தொடர்வோம்

இறைத்தந்தையுடன் அன்புடன் கூடிய முடிவற்ற கலந்துரையாடலில் நம்மையும் இணைக்கும் நமதாண்டவர் இயேசு, நமக்காக தொடர்ந்து இறைவேண்டல் செய்துகொண்டிருக்கிறார் என்பதை மனதில் கொண்டவர்களாக, நம் வாழ்வின் இறைவேண்டல்களைத் தொடர்வோம்.

-திருத்தந்தை பிரான்சிஸ்



அடுத்த ஞாயிறு

26-09-2021

உலக அகதிகள், புலம் பெயர்ந்தோர் தினம்.

# தாழ்ச்சியின் பிறப்பிடமே தலைமைத்துவம்!

இன்று ஆண்டின் பொதுக்காலம் 25-ம் வாரத்தில் நுழைகிறோம். நாம் இன்று படிக்கக்கேட்கும் வாசகங்கள் ‘முதன்மையானவராக இருக்க விரும்புகின்றவர், அனைவருக்கும் கடைசியானவராக, தொண்டராக இருக்கட்டும்’ என்னும் செய்தியைத் தருவதாக இருக்கின்றன. இன்று நாம் வாழும் காலகட்டத்தில் எல்லாரும் பெரியவராக, எல்லாருக்கும் பெரியவராக இருக்க ஆசைப்படுகின்றோம். இதனால் எவ்வளவு பிரச்சனைகளை, எவ்வளவு சண்டை சச்சரவுகளை அனுதினமும் சந்திக்கின்றோம் என்பதை நாம் அறிவோம். இயேசுவோடு இருந்து, இயேசுவாகவே மாறவேண்டியவர்கள் அவருடைய சீடர்கள். ஆனால், இயேசுவின் சீடர்கள்கூட தங்களுக்குள் யார் பெரியவர் என்ற விவாதத்தில் ஈடுபட்டார்கள் என்பதை அறிகிறோம்.

இயேசு அவர்களிடம், உண்மையில் யார் பெரியவர் என்ற செய்தியை அவர்களுக்கு எடுத்துச் சொல்கின்றார். சீடர்கள் தங்களுக்குள் யார் பெரியவர் என்ற விவாதத்தில் ஈடுபடுவதற்கு மிக முக்கியமான காரணமாக இயேசு மலைக்குச் செல்லும்போது தன்னோடு பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூன்றுபேரையும் கூட்டிக்கொண்டு போனதை சொல்லலாம். ஏனென்றால், அவர்கள் மூவரும் இயேசுவுக்கு மிக நெருக்கமாக இருந்ததினால் தாங்கள்தான் மற்றவர்களை விடப் பெரியவர்கள் என ஆணவத்தில் பேசியிருக்கலாம். அதனால் சீடர்களுக்கு மத்தியில் யார் பெரியவர் என்ற வாக்குவாதம் வந்திருக்கலாம் என உறுதியாகச் சொல்லலாம். ‘நாமோ கல்வாரியில் படவேண்டிய பாடுகளைக் குறித்து பேசிகொண்டிருக்கும்போது சீடர்கள் இப்படி யார் பெரியவர் என்ற வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றார்களே’ என இயேசு வருந்தியிருக்கலாம். ஆனாலும் இயேசு அதனை வெளிகாட்டிக்கொள்ளவில்லை.

நான்தான் பெரியவன், எல்லாம் தெரிந்தவன் என்ற ஆணவத்தில் இருக்கின்றபோது எத்தகைய அழிவு ஏற்படுகின்றது என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் மிகத் தெளிவாக எடுத்துக்கூறுகின்றது. அங்கு நாம் வாசிக்கின்றோம், “பொறாமையும் கட்சி மனப்பான்மையும் உள்ள இடத்தில் குழப்பமும் எல்லாக் கொடுஞ்செயல்களும் நடக்கும்” என்று. ஆம், நான்தான் பெரியவன் என்று வாழ்கின்றபோதுதான் சமூகத்தில், குடும்பத்தில் அதிகமான குழப்பங்கள் நடக்கின்றன.

இயேசு நான் பெரியவன் என்ற ஆணவத்தினால் வருகின்ற அழிவினைக் குறித்து நன்றாக அறிந்ததினாலோ என்னவோ சீடர்கள் யார் பெரியவர் என்ற வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம் மாறாக, “ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும் என்கிறார். அப்படியானால் உண்மையில் பெரியவர் என்பவர் பட்டம், பதவிகள், அதிகாரத்தைத் தன்னுடைய கையில் கொண்டிருப்பவர் அல்ல, மாறாக பிறருக்குச் சேவை செய்வதில் பெரியவர் என்னும் உண்மையை மிக அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்கின்றார்.

இயேசுவின் வழியில் நடக்கின்ற நாம் அடுத்தவருக்குப் பணிவிடை புரிகின்ற நல்ல மனப்பான்மையையும் உள்ளத்தில் தாழ்ச்சியும் கொண்டிருக்கின்றோமா? என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாம் அடுத்தவருக்குத் தொண்டு அல்லது பணிவிடை செய்து வாழ்கின்றபோதும் நம்மையே நாமே தாழ்த்திக்கொண்டு வாழ்கின்ற போதும் இறைவனால் மேலும் மேலும் உயர்த்தப்படுவோம் என்பது உண்மையாகின்றது.

மற்றவரை அன்போடு தாங்கிக் கொள்வோம். அதன்வழியாக இறையருளை நிறைவாய் பெறுவோம். அப்போது நம் வழியாக இறைவன் எல்லாரையும் ஆசிர்வதிப்பார்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், புனித சவேரியார் தேவாலயம், மலாக்கா.*

**பொதுக்காலம் 25-ஆம் ஞாயிறு**

முதல் வாசகம்: சா.ஞான 2: 17-2
தி. பாடல்: 54: 1-2. 3. 4,6
2ம் வாசகம்: யாக் 3: 16- 4: 3
நற்செய்தி: மாற்கு 9: 30-37

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை -வாரம் 1**